*16*

# இயேசுவின் உயிர்த்தெழுதல்

## மத்தேயு 28; மாற்கு 16; லூக்கா 24; யோவான் 20; 21

*"தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; ... சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் ..." (மத்தேயு 28:5-7).*

ஞாயிற்றுக்கிழமையன்று கல்லறை வெறுமையாக இருந்தது. ஒரு தூதன், "உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்" என்று கூறினார் (லூக்கா *24:5*ஆ, *6*). வெறுமையான கல்லறை இல்லாதிருந்தால், உலகமானது இயேசுவைப் பற்றி ஒருக்காலும் கேள்விப்பட்டிராது. உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்தவத்தை மற்ற எல்லா மதங்களில் இருந்தும் பிரித்து வைக்கும் வரையறுக்கிற வேறுபாடாக உள்ளது!

இயேசு மயக்கத்தில் இருந்து தெளிவிக்கப்படவில்லை, மறு உடலில் கொண்டுவரப்படவில்லை, அல்லது மறு உருவாக்கப்படவில்லை; அவர் உயிர்ப் பிக்கப்பட்டார். அவர் "மரணத்தினூடே சென்று புதிய உலகத்தின் மறுபக்கம் வெளிச்சென்று, புதிய மற்றும் மரணமற்ற ஜீவிகளின் உலகத்திற்குச் சென்று, இன்னமும் உடலிலேயே இருந்தார், ஆனால் ஏதோ ஒரு வகையில் அவர் மாற்றப் பட்டிருந்தார்."[1] வரலாற்றில் வேறு எவருக்கும் நடந்திராத ஒரு விஷயம் இயேசுவுக்கு நடந்தது என்று கிறிஸ்தவம் உரிமை கோருகிறது. கிறிஸ்தவ நம்பிக்கை என்பது ஆத்துமாவின் நித்தியதன்மை என்பது மாத்திரமல்ல, ஆனால் உயிர்த்தெழுதலும் நமது சரீரங்கள் மறுரூபமடைதலும்கூட உள்ளது.

பெரும்பாலான மதங்கள் பரிசுத்த ஸ்தலங்களைக் கொண்டுள்ளன; கிறிஸ்தவம் அப்படிப்பட்ட இடங்களைக் கொண்டிருப்பதில்லை. மற்ற மதங்கள் கல்லறைகளைக் கொண்டுள்ளன; கிறிஸ்தவம் அதைக் கொண் டிருப்பதில்லை. "மரித்துப்போன இரட்சகர்" ஒருவரால் என்ன பயன் உள்ளது?

எந்த ஒரு மனிதரும் உயிர்த்தெழுதலைக் கண்ணால் காணவில்லை. *அங்கிருந்தவர் யார்?* தேவன் அங்கிருந்தாரா? தேவனே இயேசுவை

உயிர்ப்பித்தார்.[2] பரிசுத்த ஆவியானவர் அங்கிருந்தாரா? ஆவியானவர் இயேசுவை எழுப்பினார் என்று பவுல் கூறினார் (ரோமர் 8:10, 11). தூதர்கள் அங்கு இருந்தனரா? நமக்குத் தெரியாது. மனிதர் அங்கிருக்கவில்லை! ஒரு வெறுமையான கல்லறையினால் இயேசு தேவனுடைய குமாரன் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர்! அவரது உடலில் ஒரு எலும்பாகிலும் அங்கு கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், கிறிஸ்தவம் முற்றிலுமாக அழிக்கப்பட்டிருக்கும். பவுல், "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை யையும் ... அறிகிறதற்கும் ..." என்று கூறினார் (பிலிப்பியர் 3:10அ). இயேசு உடல்ரீதியாக மரித்தார் மற்றும் சொல்லுக்குச் சரியாக உயிர்ப்பிக்கப்பட்டார். இது அவர் இன்றைக்கும் உயிருடன் இருக்கிறார் என்று அர்த்தப்படுகிறது. இது நாம் இன்றைக்கும் அவர்மீது விசுவாசம் கொண்டு அவருக்குக் கீழ்ப்படிய முடியும் என்றும் அர்த்தப்படுகிறது. இதுவே சுவிசேஷத்தின் செய்தியாக உள்ளது! மரணத்திற்குப் பிற்பாடு அல்ல, ஆனால் வாழ்நாள் காலத்திலேயே, ஜீவன் *என்றென்றைக்குமாக* என்பதுதான் கிறிஸ்தவ நம்பிக்கையாக உள்ளது! அவர், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமா யிருக்கிறேன் ..." (யோவான் 11:25, 26); "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6அ) என்று கூறினார்.

உண்மையிலேயே நடந்திராதிருந்தால் உயிர்த்தெழுதல் என்பது அர்த்த மற்றதாக இருக்கும். இயேசு ஒரு பொய்யரோ, வஞ்சிப்பவரோ, அல்லது ஏமாற்றுக்காரரோ அல்ல. சிலுவை என்பது கற்பனைக் கதையல்ல; அது ஒரு புராணக்கதையோ அல்லது புனைகதையோ அல்ல. அவரது மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை உண்மையானவைகளாக இருந்தன. இயேசு வரலாற்றுப் பூர்வமானவராக இருக்கிறார். கிறிஸ்துவின் கல்லறை வெறுமையாக இருப்பதால், கிறிஸ்தவர்கள் ஒரு புதையிடத்தையோ அல்லது கல்லறையையோ கொண்டிருப்பதில்லை. அவரது கல்லறை வெறுமை யாக இருந்தது என்பதை எவரொருவரும் மறுக்கவில்லை!

## அடக்கம்

சாத்தான் நரகத்தில் எப்போதாவது ஒரு விருந்தைக் கொண்டிருந்தான் என்றால், அது இயேசு ஒரு பிணமாக இருந்த இந்த பஸ்கா ஓய்வுநாளாகத் தான் இருக்கும். இயேசுவின் உயிர்த்தெழுதலானது பிசாசின் சந்தோஷத் திற்கு முடிவுகட்டி, உலகம் முழுவதிலும் நித்தியத்திற்கும் பரலோகத்தின் மகிழ்ச்சியை விடுவிப்பதாக இருக்கும்.

கிறிஸ்துவின் மரணம், *அடக்கம்,* மற்றும் உயிர்த்தெழுதல்தான் சுவிசேஷ செய்தியாக உள்ளது (1 கொரிந்தியர் 15:1-4). நாம் அவரது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றிச் சிந்தித்துவிட்டு அவரது அடக்கத்தைப் பற்றிய சிந்தனையைவிட்டுவிடக்கூடாது. அடக்கம் என்பது மரணத்தை கேட்கிறது. தேவ நம்பிக்கையற்றவர்கள், அதிகாரிகளை ஏமாற்றுவதற்காக இயேசு மயக்கமுற்று இருந்தார் அல்லது கோமா நிலையில் இருந்தார் என்ற கட்டுக்கதையைக் கூறுகின்றனர். இயேசுவின் சடலம் வைக்கப்பட்டிருந்த இடத்தைத் தூதர்கள் சுட்டிக் காண்பித்தனர் (மத்தேயு

28:6; மாற்கு 16:6). உயிர்த்தெழுதல் என்பது ஒரு மரணத்தையும் ஒரு அடக்கத்தையும் கேட்கிறது. அடக்கம் என்பது ஒரு உடலைக் கேட்கிறது.

அடக்கமானது, "எல்லாம் இழந்துபோகப்பட்டது. மரணம் வெற்றி பெற்றது. வாழ்வு தோல்வி அடைந்தது" என்று உரத்துக் கூறுகிறது. வெள்ளிக் கிழமையன்று சூழ்நிலை இருளானதாகக் காணப்பட்டிருக்கலாம், ஆனால் ஞாயிற்றுக்கிழமையன்று உயிர்த்தெழுதல் வந்தது!

இயேசு, "முன்பே திட்டமிட்ட சவ அடக்கம்" ஒன்றைப் பெறவில்லை. அவரை அவரது குடும்பத்தார்களோ அல்லது அப்போஸ்தலர்களோ அடக்கம் செய்யவில்லை. தேவனுடைய அருளிரக்கம் பற்றி நாம் வியப்படைவோமாக! கிறிஸ்து ஒரு தரித்திரராக மரித்தார், ஆனால் அவர் ஒரு அரசராக அடக்கம் செய்யப்பட்டார்! அரிமத்தியாவூர் யோசேப்பும் நிக்கொதேமுவும் சில பெண்களின் உதவியுடன் இயேசுவின் உடலைத் துணிகளிலும் விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களிலும் பொதிந்து அவரை ஒரு புதிய கல்லறையில் அடக்கம் செய்தனர் (மத்தேயு 27:57-61; மாற்கு 15:42-47; லூக்கா 23:50-56; யோவான் 19:38-42). தேவன் தமக்குச் சொந்த மானவர்களின் மீது அக்கறை எடுத்துக்கொள்கிறார்!

மரித்தவர்களை மாத்திரமே நீங்கள் அடக்கம் செய்கிறீர்கள். அவர் மரித்திருந்தார் என்பதை பிலாத்து, யோசேப்பு, நிக்கொதேமு மற்றும் பெண்கள் ஆகியோர் அறிந்திருந்தனர். இயேசுவைப் பற்றிய மிகவும் அடிப்படையான மற்றும் சான்று பெற்ற உண்மை என்பது அவருடைய மரணமாக இருக்கிறது.

## மூன்று நாட்கள்

உயிர்த்தெழுதலின் நாளான ஞாயிற்றுக்கிழமையில் இருந்து மூன்று நாட்களைப் பின்னோக்கி எண்ணி, இயேசு புதன் கிழமையன்று சிலுவையில் அறையப்பட்டார் என்று சிலமக்கள் கணக்கிடுகின்றனர். அந்த வாரத்தில் இவ்வளவு தூரம் பின்னோக்கிச் செல்லுதலானது, சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடியான இயேசுவின் கடைசி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துகிறது. வியாழக்கிழமை [சிலுவையில் அறையப்பட்டார் என்ற] கோட்பாடும்கூட அது தீர்த்து வைப்பதாக உரிமைகோருவதைக் காட்டிலும் அதிகமான பிரச்சனைகளை உருவாக்குகிறது. அவர் - "நான்காம் நாளோ" அல்லது "ஐந்தாம் நாளோ" அல்ல ஆனால் - "மூன்றாம் நாளில்" உயிர்ப்பிக்கப்பட்டார் என்று வேதாகமம் போதிக்கிறது. நூற்றாண்டுகளினூடே, வெள்ளிக்கிழமையே அவரது மரணநாள் என்று கண்ணோக்கப்பட்டுள்ளது. சிலர் இதை "பெரிய வெள்ளிக்கிழமை" என்றுகூட அழைக்கின்றனர்.

இயேசு இந்த மூன்று இரவும், மூன்று பகலையும், யோனாவுடன் தொடர்புபடுத்திப் பேசியிருந்தார் (மத்தேயு 12:40) - ஆனால் இது நேர்சொல்லுக்குச் சரியாக, உருவக நடையாக இருந்தது. அவர் கல்லறைக்குள் மூன்று முழு பகலையும் இரவுகளையும் செலவிட்டிருப்பார் என்றால், உயிர்த்தெழுதலானது "நான்காம்" அல்லது "ஐந்தாம்" நாளில்

நடைபெற்றிருக்கும். மனிதர்கள் மணிகளைக் கணக்கிடுகின்றனர்; வேதாகமம் "மூன்றாம் நாள்" என்று மாத்திரம் எளிமையாகக் குறிப்பிடுகிறது. யூதர்களின் கணக்கீட்டின்படி, ஞாயிற்றுக்கிழமை என்பது வெள்ளிக்கிழமையில் இருந்து மூன்றாவது நாளாயிருக்கிறது. இதை யூதத்துவத் தலைவர்கள் அறிந்திருந்தனர் (மத்தேயு 27:63). அவர்கள் இயேசு கூறியிருந்ததை அறிந்திருந்தபடியால், நடவடிக்கை எடுக்கும்படி பிலாத்துவைக் கேட்டுக்கொண்டனர். அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இதை அப்போஸ்தலர்கள் நினைவுகூர்ந்தனர் (லூக்கா 24:8; யோவான் 2:18-22). பின்பு அவர்கள் இயேசு அர்த்தப்படுத்தியிருந்தது என்ன என்பதைப் புரிந்துகொண்டனர்.

நாம் நமது மனங்களில் கற்பனை செய்து வைத்துள்ள மென்மையான இயேசுவைப் போலின்றி, ஏரோதுவைப் பற்றி இயேசு கடுமையாகப் பேசியிருந்தார்: "நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, *மூன்றாம் நாளில்* நிறைவடைவேன் ... என்று நான் சொன்னதாக நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள் ..." (லூக்கா 13:32, 33). அவர் மூன்றாவது நாளில் தமது இலக்கை அடைந்தார் - அது அவர் மரித்தோரில் இருந்து எழுந்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையாக இருந்தது!

## உயிர்த்தெழுதலுதலைப் பற்றிய தவறற்ற நிரூபணங்கள்

"அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிக்கிறவராகக் காண்பித்தார்" (நடபடிகள் 1:3). கிறிஸ்தவமானது தெளிவும் உண்மையுமான ஆதாரங்களின்மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மரணத்தைக் குறித்து இயேசு ஒன்றும் செய்ய இயலாதவராக இருந்தால், அவர் செய்த மற்ற எந்த விஷயமும் ஒன்றுமற்றதாகவே இருந்திருக்கும். நடபடிகள் புத்தகம் உயிர்த்தெழுதல் பற்றி வாதம் செய்வதில்லை - அதை அறிவிக்கிறது! ஒரு மரித்துப்போன இரட்சகர் கிறிஸ்தவத்தை உண்டாக்கவில்லை. லைமேன் அபோட் என்பவர் "இயேசுவின் உயிர்த்தெழுதலானது வரலாற்றில் மிகச்சிறந்த வகையில் உறுதியளிக்கப்பட்ட உண்மையாக உள்ளது" என்று கூறினார்.[3]

யூதத்துவ நியாயப்பிரமாணமானது சூழ்நிலைப்படியான ஆதாரத்தை மறுக்கிறது. இரண்டு அல்லது மூன்று சாட்சியங்களின் அடிப்படையில்தான் தீர்ப்புகள் வழங்கப்பட்டன (2 கொரிந்தியர் 13:1). தேவன் [உயிர்த்தெழுதல் பற்றிய] சாட்சியங்களுக்கு வேதவசனங்களில் கணிசமான இடம் கொடுத்தார். உயிர்த்தெழுதலானது சட்டத்தின்படியான எந்த நீதிமன்றத்திலும் நிலைநிற்கும்.

(1) *விரோதிகள்.* முரண்பாடான வகையில், அப்போஸ்தலர்கள் ஐயப்பட்டபோது விரோதிகள் நம்பினர். இயேசு மூன்று நாட்களில்

*உயிர்த்தெழுவதாக வாக்குத்தத்தம் செய்திருந்ததைக்கூறி அவர்கள் பிலாத்துவை எச்சரித்தனர். பிலாத்து, "... உங்களால் கூடியமட்டும் [கல்லறையை] பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள்" என்று கூறினான் (மத்தேயு 27:65). கல்லறையின் முகப்பில் ஒரு பெரிய கல் உருட்டி வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டது. கல்லறையைக் காவல்காக்க போர்வீரர்கள் வைக்கப்பட்டனர். மனிதரீதியாகப் பேசுவதென்றால், [இயேசுவின்] உடலை மனிதரால் எடுக்க முடிந்திருக்காது.*

*வெறுமையான கல்லறையை வெளிக்காண்பிக்கும்படி, கல்லானது புரண்டு கிடந்ததைப் பெண்கள் கண்டபோது, "அந்த உடலைக் கண்டுபிடியுங்கள்!" என்று எவரொருவரும் சத்தமிடவில்லை. எவரொருவரும் வீடு வீடாகச் சென்று உடலைத் தேடவில்லை. ஒரு சடலத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை இயேசுவின் விரோதிகள் அறிந்தனர்! இயேசு வெளிவருவதற்காக அல்ல, ஆனால் மனிதர் உள்நுழைய அனுமதிப்பதற்காகவே கல்லறையில் இருந்த கல் புரட்டப்பட்டிருந்தது. யூதத்துவத் தலைவர்களும், பரிசேயர்களும், ரோமப்போர்ச் சேவகர்களும், பிலாத்துவும், மற்றும் ஏரோதுவும் ஏதொன்றையும் செய்வதற்கு வல்லமையற்றவர்களாக இருந்தனர். இயேசு உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார் என்று அவர்கள் அறிந்தனர்! அவர்கள் உடனடியாக செய்தியை அடக்கிவைக்க முயற்சி செய்தனர்.*

*வரலாறு முழுவதிலும் எவரொருவரும் இயேசுவின் சரீரத்தைக் கண்டுபிடித்ததில்லை. அமைதி என்பது அல்லாட வைப்பதாக உள்ளது! தடயமின்றி ஒரு மனித உடலை நீக்கிப்போடுதல் என்பது தன்னிலேயே ஒரு அற்புதமாக உள்ளது. பேதுரு முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது (நடபடிகள் 2), அவர் அந்தக் கல்லறைத் தோட்டத்திற்கு வெகு அருகிலேயே இருந்தார். அவரது செய்திக்கு மூவாயிரம் பேர் கீழ்ப்படிந்தனர். அவர்களிடத்தில் அவர், "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" என்று கூறினார் (நடபடிகள் 2:36). நம்பிக்கையற்றவர்கள் பின்வரும் கேள்வியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது: "அந்த உடலுக்கு என்னவாயிற்று?"*

*(2) பெண்கள். உயிர்த்தெழுந்த இயேசு முதலில் மகதலேனா மரியாளுக்குத் தரிசனமானார் (மாற்கு 16:9; யோவான் 20:1-18). பெண்கள் கல்லறையைப் பார்க்க வந்தனர். இதற்காக அவர்களைக் கனப்படுத்துங்கள்! அவர்கள் ஒரு உயிர்த்தெழுதலைக் கற்பனை செய்ய ஒருக்காலும் தைரியம் கொள்ளவில்லை என்பதை நீங்கள் உணர்ந்தறியும்போது, அவர்களின் சாட்சியம் மிகவும் பலத்ததாக்கப்படுகிறது. அவர்கள் அப்போஸ்தலர்களைக் கண்டபோது, அவர்கள் இப்பெண்களைக் குறித்துச் சிரித்து நம்ப மறுத்துவிட்டனர் (மாற்கு 16:10, 11; லூக்கா 24:11). இதற்காக இயேசு அப்போஸ்தலர்களைக் கடிந்து கொண்டார் (மாற்கு 16:14). அவர்கள் உயிருள்ள இரட்சகரை அடையாளம் கண்டுகொள்ளக் கூடாதபடிக்கு மரித்த உடல் ஒன்றின்மீது அவ்வளவாகக் கவனம் குவித்திருந்தனர்!*

*(3) யோவான். யோவான் கல்லறைக்கு வந்து சேர்ந்து, நின்று பின்பு*

உள்ளே சென்ற பேதுருவைப் பின்தொடர்ந்தார். அவர் கல்லறைத் துணி களைக் கண்டபோது, எல்லா சாட்சியங்களையும் ஒன்று கூட்டினார். அவர் கண்டு விசுவாசித்தார் (யோவான் 20:2-8).

(4) *அப்போஸ்தலர்கள்.* கோழைகள் வேதசாட்சிகளாக மரிப்பவர்கள் ஆயினர்! இதை எது விளக்கப்படுத்த முடியும்? அது உயிர்த்தெழுதலே! மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், பேதுரு, மற்றும் பவுல் ஆகியோர் மிகச்சிறந்த சாட்சிகளாக இருந்தனர். அவர்களைப் பொய்யர்கள் என்று நீங்கள் முத்திரை குத்துவீர்களா? வேதாகமத்தில் உள்ள சுவிசேஷ விவரங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைக்க முடியுமா? லூக்காவை ஒரு முதல்தரமான வரலாற்றாளர் என்று கல்வியாளர்கள் அழைக்கின்றனர். தொடக்ககால சபையின் ஆரம்பம், வளர்ச்சி, மற்றும் தொடர்ந்த இருப்பு நிலை ஆகியவற்றை நீங்கள் எவ்வாறு விளக்கப்படுத்த முடியும்? அது யாவும் உயிர்த்தெழுதலில் இருந்து உதிக்கிறது!

(5) *"சந்தேகப்பட்ட தோமா."* இயேசுவின் மரணத்தினால் தோமா மிகவும் சீரழிந்திருந்தார். அவர் முதல் கூடுகையைத் தவற விட்டிருந்தார் (யோவான் 20:24-29ஐக் காணவும்). இந்தத் தோல்வி அவரது ஆத்துமாவுக்கு முடிவைக் கொண்டு வந்திருக்கக் கூடும். சீஷர்கள் அவரைத் தேடிச்சென் றனர். இன்றைய நாட்களில் நாம் இதைக் கற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்த வேண்டும் (கலாத்தியர் 6:1, 2; யாக்கோபு 5:19, 20; யூதா 22, 23). அடுத்த முறை அவர் அங்கிருந்தார். அவரிடத்தில் மிகவும் கடுமையாக இராதீர்கள். நீங்கள் எப்போதாவது உயிர்த்தெழுந்த மனிதர் ஒருவரைக் கண்டிருக்கிறீர்களா? அப்படிப்பட்ட ஒரு உரிமைகோருதலை நீங்கள் நம்புவீர்களா? தோமா "விரல் பரிசோதனையை" கேட்டார். இயேசு அதை வரவேற்றார்! தோமா, "என் ஆண்டவரே, என் தேவனே!" என்று அறிக்கை யிட்டார்.

(6) *அப்போஸ்தலரான பவுல்.* சவுல் (பவுல்) என்பவரின் பிந்திய மனமாற்றமானது உயிர்த்தெழுதலுக்குச் சான்றளிக்கப் போதுமானதாக உள்ளது. நடபடிகள் 9 மற்றும் 22ல் அவரது வரலாற்றை வாசியுங்கள். துன்புறுத்துபவர் பிரசங்கிப்பவர் ஆனார்! ஏன்? அவர் உயிர்த்தெழுந்த இரட்சகரைக் கண்டார் (1 கொரிந்தியர் 9:1; 15:8). அவர் சந்தேகங்கள் கொண்டிருக்கவில்லை. அவர் தமது விசுவாசத்திற்காகவும் தமது பிரசங்கித் தலுக்காகவும் இறந்தார். சரீர உயிர்த்தெழுதலில் பவுல் நம்பிக்கை கொண்டு அதைப் பற்றிப் பிரசங்கித்தார்.

(7) *தரிசனங்கள்.* பெரும்பான்மையான கல்வியாளர்கள் பத்து தரிசனங் களைப் பட்டியலிடுகையில், சிலர் பன்னிரெண்டு தரிசனங்களைப் பட்டிய லிடுகின்றனர்:

- மகதலேனா மரியாளுக்கு (மாற்கு 16:9-11; யோவான் 20:1-18ஐக் காணவும்).
- மற்ற பெண்களுக்கு (மத்தேயு 28:1-10).
- சீமோன் பேதுருவுக்கு (லூக்கா 24:34).
- எம்மாவு சாலையில் இரு மனிதர்களுக்கு (லூக்கா 24:13-32;

மாற்கு 16:12ஐக் காணவும்).

- தோமா இல்லாத வேளையில் பத்து அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 20:19-25; மாற்கு 16:14ஐக் காணவும்; லூக்கா 24:36-49).
- தோமாவுடன் சேர்த்து பதினோரு அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 20:26-29).
- கலிலேயாக் கடலருகில் ஏழு சீஷர்களுக்கு (யோவான் 21:1-23).
- கலிலேயாவில் பதினோரு அப்போஸ்தலர்களுக்கு (மத்தேயு 28:16-20; மாற்கு 16:15-18ஐக் காணவும்).
- ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரர்களுக்கு (1 கொரிந்தியர் 15:6).
- யாக்கோபுக்கு (1 கொரிந்தியர் 15:7).
- பதினோரு அப்போஸ்தலர்களுக்கு (லூக்கா 24:50-53).
- பவுலுக்கு (1 கொரிந்தியர் 15:8; நடபடிகள் 9; 26ஐக் காணவும்).

இயேசு தமது விரோதிகளுக்கு - மதவாத யூதர்களுக்கு, பிலாத்துவுக்கு, அல்லது ஏரோதுவுக்கு - தரிசனமாகவில்லை என்பதைக் கவனியுங்கள். அவர் தமது சீஷர்களுக்கே தரிசனமானார்.

சாட்சிகள் பேசியுள்ளனர்!

## நகைத்திறம் நிகழ்ச்சிகள்

வேதாகமம் ஒரு வசீகரமான புத்தகமாக உள்ளது. மனிதகுலம் அதை எழுதியிருக்க முடியாது. நம்மால் எழுத முடிந்திருந்ததென்றால் நாம் அதை இவ்வகையில் எழுதியிருக்க மாட்டோம். இந்த உண்மை ஏவுதலுக்கு வல்லமை நிறைந்த விவாதமாக உள்ளது.

(1) *பெண்கள்.* தூதர்களும் இயேசுவும் பெண்களுக்கே முதலில் தரிசன மாயினர்! பெண்கள் வாசனைத் திரவியங்களுடன் வந்தனர். இது ஒரு அழகுமிகுந்த செய்கையாக உள்ளது, ஆனால் நடைமுறைக்குரிய ஒன்றாக இருக்கவில்லை. பின்பு அவர்களுக்குப் பின்வரும் கருத்து தோன்றியது: [கல்லறையை மூடியிருக்கும்] கல்லை யார் அப்புறப்படுத்துவது? பலசாலி யான பல மனிதர்கள் தேவைப்பட்டிருக்கும், ஆனால் ஒரே ஒரு தூதனால் அதைச் செய்ய முடிந்திருந்தது!

(2) *போர்ச்சேவகர்கள்.* கல்லறையைக் காவல் காத்துக்கொண்டிருந்த போர்ச்சேவகர்களின் குழுவைக் காட்டிலும் அதிக மூடத்தனமானவர்கள் வேறு யாரேனும் இருக்க முடியுமா? பூமியதிர்ச்சி ஏற்பட்டது; பின்பு ஒரு தூதன் கல்லைப் புரட்டினான் (மத்தேயு 28:2). காவல் செய்தவர்கள் மரித்துப் போன மனிதர்களைப் போலாயினர். அவர்கள் கடிந்துகொள்ளப்பட் டார்களா? "அந்த உடலைக் கண்டுபிடியுங்கள்" என்று அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டதா? இல்லை! அந்தப் போர்வீரர்கள், தாங்கள் உறக்கத்தில் இருந்ததாகக் கூறும்படி அவர்களுக்குப் பிரதான ஆசாரியர்கள்

*லஞ்சம் கொடுத்தனர் (மத்தேயு 28:11-15)! தனது காவல் கடமையில் இருக்கும் போர்வீரன் தூங்கியதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவனால் செலுத்தப்பட வேண்டிய விலை மிக அதிகமாயிருக்கும் - ஆனால் இந்த நிகழ்ச்சியில் அவ்வாறு இருக்கவில்லை!*

*(3) எம்மாவூர் செல்லும் சாலையில் சீஷர்கள்.* [நினைவுகளில்] *சீரழிந்து போன இரு சீஷர்கள் சாலையில் நடந்து செல்லுகையில் இயேசு அவர்களுடன் சேர்ந்து கொண்டார் (லூக்கா 24:13-32). எருசலேமில் நடந்திருந்த ஒவ்வொரு விஷயத்தையும் இயேசு கவனிக்கத் "தவறி" இருந்தது பற்றி அவர்கள் திகைப்படைந்தனர். உண்மையில் அவர்கள்தான் அதைத் தவற விட்டிருந்தனர்! முரண்பாடான வகையில், இயேசு, வேதவசனங்களைப் பயன்படுத்தி, அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர் அப்பத்தை ஆசீர்வதித்து அதைப் பிட்கும் வரையில் அவர்கள் அவரை அறிந்து கொள்ளவில்லை.*

## உயிர்த்தெழுதலின் வல்லமை

*இயேசுவை மரித்தோரில் இருந்து எழுப்பிய அதே வல்லமையானது பாவிகளுக்குப் புதிய ஜீவன் ஒன்றைத் தரமுடியும். இந்தப் புதிய ஜீவனானது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்துடன் தொடங்குகிறது (ரோமர் 6:3-7). கிறிஸ்துவுடன் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்படுதல் என்பது பாவியின் மாபெரும் சிலாக்கியமாக உள்ளது!*

*பவுல், "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் ... அறிகிறதற்கும் ..." என்று கூறினார் (பிலிப்பியர் 3:7-11ஐக் காணவும்). இழந்துபோனதைத் தேடுவதும் இரட்சிப்பதுமே சபையின் இருதயமும் ஆத்துமாவுமாக உள்ளது. இது உயிர்த்தெழுந்த கர்த்தரின் செய்தியாகிய சுவிசேஷத்தின் வல்லமையின் மூலம் செய்யப்படுகிறது. சிலுவை என்பது வெற்றிகொள்ளப்பட்ட ஜெயமாக இருந்தது; உயிர்த்தெழுதல் என்பது பலியான மரணம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மதிப்புக்கூட்டப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது. மரணத்தினால் இயேசுவைப் பிடித்து வைத்துக்கொள்ளக் கூடாதிருந்தது (நடபடிகள் 2:22-36). மரணத்தில் இயேசு, மரணத்தை தோல்வியுறச் செய்து அதை அழித்துப்போட்டார் (2 தீமோத்தேயு 1:10). சிலுவையானது "மரணத்தின் மரணத்தை" குறிக்கிறது. இயேசு சாத்தானிடமிருந்து மரணத்தின் வல்லமையை எடுத்துப்போட்டார்; அவர் நம்மை மரணத்தின் "கொடுக்கில்" இருந்து விடுவித்தார் (1 கொரிந்தியர் 15:54-57). பாவிகள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் அல்ல, ஆனால் அவரது மரணத்தினாலேயே இரட்சிக்கப்படுகின்றனர்.*

*இயேசு தமது மரணத்தின் மூலம் நம்மை பாவம் மரணம் என்பவற்றின் பிரமாணத்தில் இருந்து இரட்சித்தார் (ரோமர் 8:1, 2). பாவத்தை வெற்றிகொள்ளுதல் என்பது மரணத்தை நீக்கிப்போடுதல் என்பதாக உள்ளது. இயேசு தமது இரத்தத்துடன் பரலோகத்தில் தரிசனமானார் (எபிரெயர்*

*10). அவர் "ஜீவனும் அழியாமையும்" உள்ளவராக மட்டுமின்றி, "உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக"வும் இருக்கிறார் (யோவான் 11:25, 26). நரகம் என்பது அழியாததாக உள்ளது. நமது ஆத்துமாக்கள் அழியாதவைகளாக உள்ளன. இயேசு நித்திய "உயிர்த்தெழுதலாக" இருக்கிறார்! பவுல் நமது மாற்றத்தை வாக்களித்தார் (1 கொரிந்தியர் 15:50-58). கிறிஸ்து உயிர்த்தெழாதிருந்தால், நமது விசுவாசம் வெறுமையானதாக இருக்கிறது (1 கொரிந்தியர் 15:12-19).*

*இயேசுவின் உயிர்த்தெழுதல் நமது உயிர்த்தெழுதலை உத்தரவாதப் படுத்துகிறது. தேவன், இயேசுவுக்காக எருசலேமின் கல்லறைத் தோட்டத்தில் செய்ததை நமக்காகவும் செய்வார். நாம் மரிப்பதற்கல்ல, ஆனால் வாழ்வதற்காகவே படைக்கப்பட்டோம். அப்படியானால் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை பற்றிய போதனை* சரியாக இப்பொழுது *என்னவாக உள்ளது? எனது வாழ்வு வீணானதல்ல; அது ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளது. எனது தோல்விகள் மரணத்துக்கானவையல்ல; அவைகள் மன்னிக்கப்பட்டுள்ளன. எனது மரணம் நிறைவானதல்ல; உயிர்த்தெழுதல் ஒன்று உள்ளது. என்ன ஒரு நம்பிக்கை! நாம் இயேசுவைப்போல் இருப் போம்! அவர் சிலுவையின்மீது இருந்த போது சாத்தான் தோற்கடிக்கப் பட்டான், பாவம் ஜெயம்கொள்ளப்பட்டது, மற்றும் மரணம் நீக்கிப் போடப்பட்டது. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரிந்தியர் 15:57).*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்புகள்

[1]N. T. (Tom) Wright, *Luke for Everyone* (Louisville, Ky.: Westminster John Knox Press, 2004), 296-97. [2]*நடபடிகள் 2:24, 32; 3:15, 26; 4:10; 5:30; 10:40; 13:30, 33, 34; 17:31; ரோமர் 10:9; 1 கொரிந்தியர் 6:14; 2 கொரிந்தியர் 4:14; கலாத்தியர் 1:1; எபேசியர் 1:20 ஆகிய வசனங்களைக் காணவும்.* [3]Lyman Abbott, *The Theology of an Evolutionist* (New York: Outlook Co., 1925), 129.